நிறைவேற்றியிருக்கிறார்கள். அத்தனை சட்டங்களும், இதுவரையிலேயும் செல்லுபடியாகிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

எனவே, சட்டப்படி செல்லுமா, செல்லாதா என்கிற பிரச்சினை எல்லாம் சட்டத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இன்றைக்கு வேறு ஏதோ திட்டத்தோடு அலைகிறவர்களுடைய செயலாக இருக்குமே தவிர, நமக்கு எந்தக் கவலையும் வேண்டாம். இது சட்டப்படி நடக்கிற கூட்டம், இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெறும், பல்வேறு சட்டங்களை நிறைவேற்றுவோம். அப்படி நிறைவேற்றுகிற சட்டங்கள் இதன் காரணமாகச் செல்லுபடியாகுமா, ஆகாதா என்கிற சந்தேகம் திரு. செல்வராசன் அவர்களுக்குத் துளி கூட இருக்கவேண்டியதில்லை. எனவே நீங்கள் இந்தச் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் இருந்து உதவுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1994 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர், 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.